

# புனித லூர்து மாதா தேவாலயம்


45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, பேராக் மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org




**திருத்தந்தையின் கருத்து: ஊழலுக்கு "இல்லை" என்போம்:** பொருள், அரசியல் அல்லது ஆன்மீக சக்தியுடையோர் எந்த வித ஊழல் கவர்ச்சியையும் எதிர்த்திட வேண்டுமென்று

**பிப்ரவரி மாத கரு : கிறிஸ்துவில் நாம் குணமானோம்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| பிப் 4 ஞா | காலை 6.45<br>காலை 8.45 | நவநாள்/ திருப்பலி (த)<br>நவநாள்/ திருப்பலி (ஆ, ம) | பொதுக்கால 5ஆம் ஞாயிறு (புலூமா நாள் 3)<br>பொதுக்கால 5ஆம் ஞாயிறு (புலூமா நாள் 3) |
| பிப் 5 திங் | மாலை 7.30 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 4 |
| பிப் 6 செவ் | மாலை 7.30 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 5 |
| பிப் 7 புதன் | மாலை 7.30 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 6 |
| பிப் 8 வியா | மாலை 7.30 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 7 |
| பிப் 9 வெள் | மாலை 7.30 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | புலூமா நாள் 8 |
| பிப் 10 சனி | மாலை 6.30 | நவநாள் & திருப்பலி (ஆ, த) & பவனி | புலூமா திருவிழா |
| பிப் 11 ஞா | காலை 9.00 | திருப்பலி (ஆ, த, ம) | பொதுக்கால 6ஆம் ஞாயிறு |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| பிப் 4 ஞா | காலை 8.30<br>காலை 10.30<br>மதியம் 3.30 | பெர். மையம்<br>பெர். மையம்<br>ஆலயம் | மறைக்கல்வி (த)<br>மறைக்கல்வி (ஆ)<br>கிஅ & அவே சிற்றாலய பாடல்குழு பயிற்சி |
| பிப் 6 செவ் | காலை 8.30 | ஆலயம் | பங்கு பரிந்துரை குழு |
| பிப் 10 சனி | காலை 9.00 | பெர். மையம் | ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2 |
| 11 பிப்ரவரி 2018 மறைக்கல்வி வகுப்புகள் நடைப்பெறாது. மீண்டும் 18 பிப்ரவரி 2018 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும். | | | |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. புலூமா திருவிழா:**

- ➢ பங்கு திருவிழா கொண்டாட்டம் 2 பிப் ~ 11 பிப் 2018 வரை நடைபெறும். இந்த வருட கொண்டாட்டத்திற்கான கருத்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் குடும்பத்தை பற்றிய ஆவணம்: Amoris Laetitia இதன் அர்த்தம் **"அன்பில் மகிழ்ச்சி".** அதே கருத்து அனைத்து சிற்றாலயங்களுக்கும் பயன்படுத்தப்படும்.
- ➢ பங்கு திருவிழாவிற்காக பொருளாகவோ (உணவு) அல்லது ரொக்கமாக **நன்கொடைகளை** செலுத்த விருப்பமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் கொடுக்கலாம்.
- ➢ 4/2/18 (ஞாயிறு) மாலை 6.00க்கு ஆலயத்தில் அன்னையின் திருவுருவ சிலையை சுமந்து செல்பவர்கள், ELF குழு, திருவழிபாட்டு குழு, திருப்பலி மேற்பார்வையாளர், உபசரிப்பாளர் & ரேலா ஆகியோருக்கு பவனிக்கான ஒத்திகை நடைபெறும்.

**2. இறைவனுடன் ஆன்மீக தொடர்பை உருவாக்குதல்:** எவ்வாறு உங்களது ஆன்மீக தொடர்பை இறைவனுடன் வளர்த்துக்கொள்ளவும், மேம்படுத்தவும் முடியும் என்ற தலைப்பில் ஒரு பட்டறை நடைபெறும். நாள்: 18/2/18 (ஞாயிறு) நேரம்: மாலை 4.00~6.30 இடம்: பெர். மை, புலூமாதே. 25 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு உரியது. பதிவுகள் பங்கு அலுவலகத்தில் செய்யலாம். ரிம 15/- (ஒரு நபருக்கு) தயவு செய்து உங்களது எழுதுகோளை கொண்டு வரவும்.

**3. அனைத்துலக மகளிர் தின கொண்டாட்டம்:** 11/3/18 (ஞாயிறு) காலை 10.30 ~ மதியம் 1.00 வரை புலூமாவில் நடைபெறும். அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி லூர்து மகளிர் குழுவால் 4 பிப் 2018 (ஞாயிறு) திருப்பலிகளுக்கு பிறகு பங்கு மண்டபத்தில் காலை சிற்றுண்டி & பதிவுகள் நடைபெறும். அவர்களுக்கு ஆதரவு தாருங்கள்.

**4. திருநிலைப்பாட்டிற்கான முந்தைய அறிவிப்புகள்:** பின்வரும் வேட்பாளர் சந்தனசாமி பீட்டர், 3/3/18 (சனி), காலை 10.00க்கு ஈப்போ, புனித லூர்து அன்னை தேவாலயத்தில் திருமணமான நிரந்தர திருத்தொண்டராக ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ், D.D. அவரின் தலைமையில் திருநிலைப்படுத்தப்படுவார். இந்த திருநிலைப்பாட்டிற்கான முன்னறிவிப்புகள் திருச்சபை சட்டம் எண் 1051 $2^{0}$ இதனை நிறைவு செய்கிறது. கத்தோலிக்கர்கள் யாருக்காவது வேட்பாளரைப் பற்றி ஏதேனும் தடங்கல்கள் அல்லது ஆட்சேபம் இருந்தால் அவர் திருப்பொழிவு செய்யப்படுவதற்கு முன்பாக ஆயரை தொடர்பு கொண்டு உடனடியாக தெரிவியுங்கள்.

**5. திருமணமாகாத கத்தோலிக்கருக்கான துணை தேடும் மையம்:** திருமணமாகாத கத்தோலிக்கருக்கான துணை தேடும் மையம் (பினாங்கு மறைமாவட்ட குடும்ப வாழ்வு பணிக்குழுவுடன் இணைந்தது) கீழ்கண்ட ஒரு தங்கும் நிகழ்வுக்கு ஏற்பாடு செய்கிறது: **நாள்**: 9 ~ 11 மார்ச் 2018 (2 இரவுகள்/ 3 நாள்கள்) **இடம்**: புனித அன்னம்மாள் விடுதி, புக்கிட் மெர்தாஜாம் **கட்டணம்:** ரிம 200.00 (பகிர்ந்து தங்கும் அடிப்படையுடன், காலையுணவு, தேநீர் சிற்றுண்டி, மதிய உணவு & இராவுணவு உள்பட) **பதிவுக்கு இறுதி நாள்**: 23 பிப் 2018 **தொடர்புக்கு:** தெரேசா வான் (017-5788192/ 04-2610273) மின்னஞ்சல்: catholicdatinghub@gmail.com

**6. ரேச்சலின் திராட்சைதோட்ட ஒடுக்கம்:** பாதுகாப்பில் தங்கி வாழவும், கருக்கலைப்பின் வேதனைகளை கடவுளிடம் ஒப்புக்கொடுக்கவும், அங்கு மன்னிப்பு மற்றும் குணமளிப்பின் வாக்குறுதி உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும் ஓர் அழைப்பு. பினாங்கில் அடுத்த ஒடுக்கம் 16 ~18 மார்ச் 2018இல் நடைபெறும். நீங்களோ, உங்களுக்கு தெரிந்த யாராகிலும் கருக்கலைப்பினால் தொடப்பட்டிருந்தால் தயவு செய்து அந்தரங்க எண்கள் 016-4190538 சிரில்லா (இரவு 7-9 வரை) அல்லது மின்னஞ்சல்: healinggracerachelsvineyard@gmail.com வழி 6/3/18க்குள் தொடர்பு கொள்ளவும்.

**7. 24 மணி நேரம் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களுடன் அனுபவத்தில் வாழ்தல்- ஆண்டு 2:** SPM & அதற்கு மேல் முடித்தவர்களுக்கும் தனித்த இளைஞர்களுக்கும் பொதுவானது. இந்த நிகழ்வு இறைப் பணி மற்றும் குருத்துவ தேவழைத்தலை கண்டறிய ஆர்வமுள்ளவர்களுக்காக வடிவமைக்கப்பட்டது. 3 ~ 4 மார்ச் 2018 மதியம் 1 மணி ~ மதியம் 1 மணி வரை புனித லூர்து அன்னை தேவாலயம், சிலிபின், ஈப்போ, பேராக்-ல் நடைபெறும். கட்டணம் இல்லை. தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும். தொடர்புக்கு: வின்சென்ட் ஜோசப் (04-2611350) அலுவலக நேரம் (திங்கள் - வெள்ளி)

**8. புலூமா திருவிழாவிற்கு வாகனங்கள் நிறுத்தும் இடங்கள்:** தயவு செய்து உங்கள் வாகனங்களை வெஸ்லி மெத்தடிஸ்ட் பள்ளியிலும், Caltex அருகில் உள்ள B நுழைவாயிலையும் பயன்படுத்தலாம். மார்ட்டின் ஃபுட் கேட்டர்ரஸ்-வழியாக இணைந்த சாலை மற்றும், ஜாலான் சம்மர் சாலையிலும் **3 பிப் 2018 & 10 பிப் 2018** திருவிழா திருப்பலிகளுக்கு நீங்கள் பயன்படுத்தலாம். **உங்களது வாகனங்களை வீட்டிற்கு முன்னும் ஆலயத்திற்கு எதிர்புறம் உள்ள Caltex பெட்ரோல் நிலையத்திலும் நிறுத்தாதீர்கள்.! Caltex நிலையம் நமது கார் நிறுத்தும் வரம்புக்கு உட்பட்டதல்ல. தயவு செய்து ரேலாவின் வழிமுறைகளைப் பின்பற்றவும். உங்களது சொந்த உடைமைகளை வாகனங்களில் வைக்காதீர்கள். பங்கு மற்றும் ரேலா உறுப்பினர்கள் உங்களின் அலட்சியத்திற்கு பொறுப்பேற்கமாட்டார்கள். உங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி!**

**9. திருநீற்று புதனுக்கு 2017இல் ஆசீர்வதிக்கப்பட்ட குருத்தோலைகள்:** விபூதி புதனுக்கு பயன்படுத்தப்படும் விபூதி முந்தைய ஆண்டு ஆசீர்வதிக்கப்பட்ட ஓலைகளிலிருந்து வருகிறது. இவ்வாண்டு விபூதி புதன் 14/2/18ல் வருகிறது. பழைய ஓலைகளை 11/2/18 (ஞாயிறு) நண்பகலுக்கு முன்பாக ராணியிடம் (தூயகப் பணியாளர்) / பங்கு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**10. ஜனவரி மாதம்: திருஇருதய ஆண்டவருக்கு குடும்ப அர்ப்பணிப்பு:** ஜனவரி மாத தலைவர்கள் ஒன்றுகூடுதலின் போது, திருஇருதய ஆண்டவர் உருவப்படமும், செபத்தாளும் உங்களின் சம்பந்தப்பட்ட தலைவர்களின் வழியாக அதிசவில் உள்ள எல்லா குடும்பங்களுக்கும் விநியோகிக்கப்படும். இது குடும்ப செபத்திற்காகவும், குடும்பத்தை இயேசுவின் திருஇருதயத்திற்கு அர்ப்பணிக்கவும் வழங்கப்படுகிறது. தலைவர்களுக்கு வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவர்கள் அதிச ஒன்றுகூடுதலின் போது உங்களுடன் பகிர்ந்து கொள்வார்கள். தயவு செய்து திருஇருதய ஆண்டவரின் உருவப்படத்தையும், செப தாளையும் உங்கள் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். இந்த செபத்தை உங்கள் குடும்பத்தாருடன் சேர்ந்து செபியுங்கள்.

**11. மண்டப சீரமைப்பு:** நமது லூர்து மண்டபம் வருந்ததக்க நிலையில் உள்ளது. நான் கடந்த ஆண்டு அறிக்கைத்தாளில் அறிவித்தப்படி நாம் மண்டபத்தை சீரமைக்க உள்ளோம். குளிரூட்டிகளுடன் புதிதாக சீரமைக்கப்பட்ட மண்டபம், பங்கு வருவாயை அதிகரிப்பதற்காக திருமணங்களுக்கும், மற்ற நோக்கங்களுக்காகவும் வாடகைக்கு விடப்படும். உங்களுக்கு ஏதேனும் கடுமையான, செல்லத்தக்க காரணங்கள் (நியாயமான எதிர்ப்புகள்) இருந்தால் கட்டுமான வேலை தொடங்குவதற்கு முன்பே, பங்கு குருவானவர்களிடம் தெரிவியுங்கள். உத்தேச சீரமைப்பு திட்டம் பங்கு அறிக்கைப் பலகையில் ஒட்டப்பட்டிருக்கிறது.

**12. 2018க்கான பங்கு கருத்து:** "கருணை மற்றும் தன்னலமற்ற பணி"யை நாம் 2018க்கான கருத்தாக தேர்ந்தெடுத்துள்ளோம். இவ்வாண்டில் 5 பிறரன்பு திட்டங்கள் 5 திசைகளால் மேற்கொள்ளப்படும். அதிச தலைவர்களுடன் திசை தலைவர்கள் இணைந்து ஏற்பாடு செய்யும் இத்திட்டங்கள் பஒகு (PAT) மேற்பார்வையினாலும் உதவியுடனும் செயல்படுத்தப்படும். ஆண்டு இறுதி மதிப்பீடு இதையொட்டியே இருக்கும்.

**13. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஜனவரி 2018 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **382,152.82** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **386,602.39** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**28/01/18 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,234.15 **காலை 9.00** - RM 1,910.50 **காலை 11.00** - RM 83.00
**மொத்தம்** - RM 3,227.65 **2017** - RM 780.00 **2018** - RM 420.00 **மொத்தம்** - RM 1,200.00 **கல்லறை** - RM 1,306.65
நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம் என்று ஆங்கிலத்தில் எழுதவும்